C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்



# மன்னா..

பொழிவு : 17 SEPTEMBER 2025 ஆகாரம் : 09

## எழுந்து கட்டுவோம் வாருங்கள்

என்று சொல்லி, அந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்

நெகேமியா 2:18

## Let us Rise up and Build

So they strengthened their hands for the good work

Nehemiah 2:18



# UPCOMING EVENTS

All Sun Sep '25 — 5:00 pm
**OUT REACH MINISTRY - CAMP**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
Sunday

All Tue Sep '25 — 7:30 pm
**COTTAGE PRAYER**
Church Members Home
Tuesday

06 Sep '25 — 10.20 am
**MONTHLY FASTING PRAYER**
Parsonage - C.S.I. Tamil Parish Alain
Saturday

All Wed Sep '25 — 7:30 pm
**BIBLE STUDY & PRAYER**
Parsonage - C.S.I. Tamil Parish Alain
Wednesday

13 27 Sep '25 — 7:30pm - 09:30pm
**EVENING SERVICE**
Evangelical Church Campus Kanad hospital - Al Ain
Saturday

06 20 Sep '25 — 7:30pm - 09:30pm
**HOLY COMMUNION SERVICE**
Evangelical Church Campus Kanad hospital - Al Ain
Saturday

27 Sep '25 — 9:30 pm
**BIBLE QUIZ-PSALMS**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
Saturday

30 Sep '25 — 11:30 pm
**MONTH END SERVICE**
Parsonage - C.S.I. Tamil Parish Alain
Tuesday

All Sat Sep '25 — 6:30 pm
**CHILDREN BIBLE SCHOOL**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
Saturday

All Tue & Fri — 5pm (Tue) & 7:30pm (Fri)
**TAMIL CLASS**
Parsonage - C.S.I. Tamil Parish Alain
Tue & Fri

# From the Pastor's Desk



**அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள்.**

1947 ஆம் ஆண்டு செப்டம்பர் 27ஆம் தேதி சென்னை யில் உள்ள தூய ஜார்ஜ் கதீட்ரல் ஆலயத்தில் மெத்தடிஸ்ட், பிரிஸ்பிட்டேரியன், ஆங்கிலிகன், காங்கிரிகேஷனல் என்ற பல அமைப்புகளான திருச்சபைகள் ஒன்றிணைந்து, தென்னிந்திய திருச்சபையாக உருவானது.

மெத்தடிஸ்ட் திருச்சபையின் நிறுவனர்களான 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜான் வெஸ்லி (1703—1791) அவர் சகோதரர் சார்லஸ் வெஸ்லி (1707—1788) ஆகியோர் இங்கிலாந்தில் நிறுவினதே மெத்தடிஸ்ட் திருச்சபை ஆகும். அவர்கள் எளிய மக்கள் அனைவரும் இணைந்து தொழுதிட மிகவும் அர்ப்பணிப்புடன் திருப்பணி செய்தனர் அத்திருச்சபையே மெத்தடிஸ்ட் திருச்சபை ஆகும். சகோதரர்கள் இருவரும் ஒருமித்து அர்ப்பணிப்புடன் திருப்பணியையும் மக்களின் சேவையும் செய்தனர். ஒருமைப்பாடு இன்றைய சமூகத்தில் அடிப்படையானது என்பதனை சிந்திப்போம்.

ஆண்டவர் இயேசு ஜெபித்த ஜெபம் யோவான் 17—ல் மிகத் தெளிவாக உள்ளது.யோவா 17: 21—ல், பிதாவை நோக்கி நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்கிறேன் என்று ஜெபித்தார்.

அனைவரும் ஒன்றாய் இருப்பார்களாக (THAT THEY ALL MAY BE ONE) இதுவே C.S.I—ன் பொன்மொழி ஆகும்.

அன்பானவர்களே, நாம் அனைவரும் ஜெப வீரர்களாய் மாறுவோம், இணைந்து ஜெபிப்போம்.

### இணைந்து ஜெபிப்போம் வாருங்கள்:

பாரசீக நாட்டில் அடிமைத்தன வாழ்வில் இருந்த நெகேமியா யூதாவில் இருந்து வந்த மக்களிடம் எருசலேமைக் குறித்து விசாரித்த போது அதன் அலங்கம் இடிக்கப்பட்டதையும், தீக்கிரை—யானதையும் கேள்விப்பட்டு மிகவும் அழுது ஜெபித்தார். (நெகேமியா 1:4,11)

### எழுந்து கட்டுவோம் வாருங்கள்:

எருசலேமின் அழிவுற்ற நிலைமையைக் கண்டு நெகேமியா அழுது, உபவாசித்து, ஜெபித்தார். தொடர்ந்து எருசலேம் அலங்கத்தை கட்டுவதற்கான செயல்பாடுகளை திட்டமிட்டார். எருசலேமுக்கு சென்று மக்களை ஒன்றிணைத்து, எருசலேம் அலங்கத்தை கட்டுவோம் வாருங்கள் என்று

அழைத்தார். மக்கள் அனைவரும் இணைந்து எழுந்து கட்டுவோம் வாருங்கள் (நெகே 2:18) என்று கரம் கோர்த்தார்கள். அதன் விளைவாக நேர்த்தியாக எருசலேம் அலங்கத்தை கட்டி முடித்தார்கள். நம்மை ஆண்டவர் அழைப்பது இணைந்து ஜெபித்திடவும், எழுந்து செயலாற்றிடவுமே சிந்திப்போம். இயேசு கிறிஸ்து கூறியது, செயல்வீரர்களாக, இணைந்து செயல்படுகிறவர்களாக உலகிலே வாழுங்கள் என்பதுவே (மத் 25: 40).

எனவே, நம்மை மீண்டும் அர்ப்பணிப்போம், ஆண்டவரின் திருச்சமுகத்தில் ஒப்புக் கொடுப்போம், இணைந்து ஜெபிப்போம், ஒருமித்து செயல்படுவோம். ஆண்டவர் தாமே ஆசீர்வதிப்பாராக, ஆமென்.


இறைப்பணியில்,
ஆயர்.

Rev. S.Baktha Thiyagarajan

**நம் நினைவிற்கு...**

**1947 ஆம் ஆண்டு செப்டம்பர் 27ஆம் தேதி உருவான தென்னிந்திய திருச்சபையில் தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா, புதுச்சேரி மற்றும் இலங்கை உள்ளிட்ட பகுதிகளில் 25 பேராயங்களாக, நான்கு மில்லியன் இறை அன்பர்களைக் கொண்ட மாபெரும் திருச்சபையே C.S.I ஆகும்.**

## மன்னா ஆகஸ்ட்-25 மீள் பார்வை...




ஆண்டவர் இயேசுவுக்கே மகிமை. ஆகஸ்ட் மாத மன்னாவைக் குறித்த ஒரு பார்வை. பக்கம் 3-ல், ஆண்டவரின் ஊழியரான ஏலியின் அர்ப்பணிப்புள்ள வாழ்வும்,அவரது 40 ஆண்டு கால திருப்பணியும் நமக்கான அறைகூவல் என்றும்,பக்கம் 4-ல், செயலர் மடலில் திருச்சபையின் திருப்பணி நிகழ்வுகளும், விடுதலை வாழ்வளித்த மீட்பர் இயேசுவின் பாதச்சுவடுகளை பின் தொடர்வோம் என்றும்,பக்கம் 6-ல், கடவுளின் 10 குண நலன்கள் பற்றியும், பக்கம் 7-ல், இறைவார்த்தையாம் திருவசனத்தின் ஆற்றல் நேற்றும், இன்றும்,என்றும் அற்புதமாக செயல்படுகிறது என்றும்,பக்கம் 8-ல், திருமறை வினாவிற்கான விடைகள் எழுதியிருப்போரும், பக்கம் 9-ல், சிறுமைப் பட்டோரின் வாழ்வு எத்தனை மேன்மை அடைந்தது, நாமும் நமது சிறுமையை ஆண்டவரிடம் ஒப்புக்கொடுத்தால் உயர்வடைவோம் என்றும், பக்கம் 10-ல், உடைந்த உள்ளங்கள் ஆண்டவர் இயேசுவின் கிருபையால் ஊன்ற கட்டப்படும் என்றும்,பக்கம் 11-ல் தானியேல் வாழ்வின் வழியே தூய்மையும், ஜெபமும் நிறைந்த வாழ்வை நாமும் வாழும்போது ஜெயம் பெறுவோம் என்றும்,பக்கம் 12-ல், நன்மை உண்மை,இனிமை எதுவென்று பகுத்தறிந்து வாழ்ந்திட தினமும் திருமறையை தியானிப்போம், அதன் வழியே பயணிப்போம் என்றும்,பக்கம் 13-ல்,இயேசுவின் சீடரான பிலிப்புவின் விசுவாச வாழ்வும், ரத்த சாட்சியான வாழ்க்கையும் நமக்கான அழைப்பு என்றும்,பக்கம் 15-ல்,கடவுளுடன் நாம் ஆழ்ந்த ஜெபத்தின் வழியே, நெருங்கின தொடர்பினை ஏற்படுத்திடலாம் என்றும், தொடர்ந்து சிறுபிள்ளைகளுக்கான விடைகள் எழுதியிருப்போர், சிறு பிள்ளைகளுக்கான புதிர்கள், பக்கம் 21-ல், திருவசனத்தின் உவமையில் நாம் எந்த இடமாக இருக்கிறோம் என்று மறுஆய்வு செய்திடவும், தொடர்ந்து OUTREACH ஊழியங்கள் மற்றும் அனைத்து ARTICLE எழுதி உள்ளோர் என அனைவருக்கும், அனைத்திற்கும் வாழ்த்துக்கள். ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,
ஆயர்.



# பொறுமையானவர்

# லேயாள்

**(ஆதியாகமம் 29:16- 35)**

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அனைவருக்கும் நல் வாழ்த்துக்கள்.

அன்பிற்கினியவர்களே,லேயாளைக் குறித்து சிந்தித்து அவர்களிடத்தில் உள்ள நல்ல குணங்களை நாம் பின்பற்றுவோம்.

லேயாளுடைய உடலிலே ஒரு குறை,அது அவரின் கண்கள் கூச்சப் பார்வையாய் இருந்ததே. எனவே லேயாளை விரும்பாத யாக்கோபுக்கு, சூழ்நிலைக் காரணமாக திருமணம் நடந்தது. அதனையும் லேயாள் ஏற்கிறாள். ஏனெனில் தன்னை திருமணம் செய்ய ஒருவரும் முன் வராததால் அதனை ஏற்கிறார்.

யாக்கோபு தன் மனைவி லேயாளை நேசிக்கவில்லை. முதல் காரணம் ராகேலை அவர் நேசித்தார். இரண்டாவது ராகேல் அழகாக இருந்ததார். அது லேயாளுக்கு மன வேதனையாக இருந்தது. ராகேலுக்கு தான் அழகு என்றும் அதனால் என்னைத்தான் என் கணவர் நேசிக்கிறார் என்றும் மேட்டிமையான சிந்தைக் கொண்டதால் அவள் கர்ப்பத்தை கர்த்தர் அடைத்திருந்தார்.

லேயாளையோ கர்த்தர் நினைத்தார், காரணம் அவள் அனைவராலும் அற்பமாய் எண்ணப்பட்டார் (ஆதி29:31). லேயாள் கருவுற்றார், தொடர்ந்து நான்கு குமாரர்களை பெற்றாள்.

அதனைத் தொடர்ந்து இரண்டு குமாரர்களையும் ஒரு மகளையும் பெற்றாள். ஒவ்வொரு பிள்ளையைப் பெற்றெடுக்கும் போதும் என் கணவர் இப்போது என்னை நேசிப்பார் என நினைத்தாள். ஆனால் யாக்கோபு லேயாளை நேசிக்கவில்லை, ராகேலையே நேசித்தார். ராகேலின் சகோதரியான (ஆதி30:1) லேயாளை நேசிக்காமல், அவள் மீது பொறாமை கொண்டாள். ராகேல் சொற்ப காலமே வாழ்ந்து இரண்டு பிள்ளைகளைப் பெற்று மரித்துப் போனாள். யாக்கோபுக்கு முதல் மனைவியான லேயாளேக் கடைசி வரை யாக்கோபுடனிருந்து மரித்து, தன்னுடைய முன்னோர் அடக்கம் பண்ணப்பட்ட இடத்தில் அடக்கம் செய்யப்பட்டாள், லேயாள் அருகில் யாக்கோபை அடக்கம் செய்கிறார்கள்.

லேயாளைக் கணவர் தான் நேசிக்கவில்லை, ஆனால் கடவுள் அவளுடைய சிறுமையையும், அற்பமாய் எண்ணப்பட்டதையும் பார்த்து அவளை மிக அதிகமாக நேசித்தார். மனிதருடைய அன்பு மாறும், அது மறைந்து போகக் கூடியதாக இருக்கும். ஆனால் கடவுளின் அன்பு மாறாது, மறையாது அதற்கு லேயாள் ஒரு சிறந்த உதாரணமாவார்.

லேயாள் பெற்ற பிள்ளைகளில் ஒரு பிள்ளையின் கோத்திரம் லேவி, அது ஆசாரியக் குடும்பம். யூதா வம்சத்தில் இருந்து தாவீது முதலான பெரிய ராஜாக்களும், உலக இரட்சகர் இயேசு கிறிஸ்துவும் தோன்றினார்கள். கடவுள் சொன்ன வார்த்தை (சங்கீதம் 113:7,8) நிறைவேறியது.

## லேயாளிடத்தில் உள்ள நல்ல குணங்கள்

- அவள் கண்ணில் கோலாறு இருந்தாலும்,அவள் பார்வையில் கோலாறு இல்லை.

- தான் முதல் மனைவியாக இருந்தாலும், அந்த உரிமையை எடுக்காமல் விட்டுக் கொடுத்து வாழ்ந்தார்.

- தன்னைத் தன் கணவரும்,தன் சகோதரியும் அசட்டையாக எண்ணினாலும், எல்லாவற்றையும் சகித்துக் கொண்டாள்.

- மிக முக்கியமான ஒரு செய்தி இஸ்ரவேலுக்கு தகப்பன் யாக்கோபு என்றால் தாய் லேயாள் தான். ஏனெனில் ஏழு பிள்ளைகளைப் பெற்றவள், யோசேப்பு பென்யமீன் இவர்களையும் வளர்த்தவர்.

- அவளிடத்தில் பொறுமை, சகிப்புத்தன்மை அன்பு,எதையும் ஏற்றுக் கொள்ளும் பண்பு இப்படிப்பட்ட நல்ல குணங்கள் காணப்பட்டன.

லேயாளிடத்தில் உள்ள நற்குணங்களை நாமும் பின்பற்றி பொறுமையாக வாழ்வோம், கடவுள் நம்மையும் ஆசீர்வதித்து மேன்மைப்படுத்துவார், ஆமென்.

இறைப்பணியில்,
ஆயரம்மா



(C.B.S)

*Mrs . P . Velanganni*

# செயலர் மடல்



கிறிஸ்துவுக்கு பிரியமான திருச்சபை மக்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள் கடந்த எட்டு மாதங்கள் தேவன் நம்மோடு இருந்து, நம்மை பாதுகாத்து வழிநடத்தி வந்த மட்டில்லா கிருபைக்காக நன்றி செலுத்துவோம். மற்றும் விடுமுறை காலங்களில் தங்கள் சொந்த தாய் நாட்டுக்கு சென்று என் சொந்தங்களை கண்டு மன மகிழ்ந்து கர்த்தருடைய பெரிதான நாமத்தினாலே அன்பினை பகிர்ந்து திரும்பி வந்த திருச்சபை மக்கள் அனைவருக்கும் கர்த்தர் பாராட்டின பெரிதான நன்மைகளுக்கு மீண்டும் ஒருமுறை நன்றி செலுத்துவோம். வரப்போகிற காலங்களில் (CHAMP FOR CHRIST) சாம்பியன்ஸ் ஃபார் கிரைஸ்ட் மற்றும் அறுவடை திருநாளுக்கான ஆயத்த பணிகளிலும் வாரும் தோறும் சிற்றுண்டி உணவு பொருட்கள் வழங்குவதிலும் தங்கள் உதாரணமான நேரத்தையும் பயன்படுத்தி வரும் திருச்சபை மக்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். குறிப்பாக ஸ்தோத்திரம் பண்டிகைக்காக குடும்பத்தோடு ஜெபிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம் இந்த ஆண்டு கடந்த ஆண்டுகளை காட்டிலும் ஆசீர்வாதமான ஆண்டாக அமைய இறைவனிடம் வேண்டிக் கொள்வோம்.

ஸ்தோத்திர பண்டிகைக்கான ஆயத்த பணிகளை மேற்கொள்ளும் பொழுது, கர்த்தருடைய பெரிதான கிருபை நம்மோடு இருக்கவும், குறிப்பாக ஒவ்வொரு தன் ஆர்வலர்கள் தாங்கள் திறம்பட செயல்பட மனதாலும் உடலாலும் தேவன் அவர்களோடு இருக்க போக்கிலும் வரவிலும் தேவனுடைய பாதுகாப்பின் காரணம் திருச்சபை மக்களோடு இருக்க நான் ஜெபித்துக் கொள்வோம். ஒன்றிணைந்து திருச்சபையின் பணிகளை மேற்கொள்ள ஒவ்வொருவரும் இணைந்து விடுவோம்.

எழுந்து கட்டுவோம்!

எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி,அந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளை திடப்படுத்தினார்கள். — நெகேமியா 2:18.

இது நம் வாழ்வுக்கும் ஒரு பெரிய பாடமாகும்.

- **ஒன்றுபட்ட மனம்:** நெகேமியாவும் மக்களும் ஒரே நோக்கத்துடன் இணைந்தார்கள். நல்ல காரியம் நடைபெற, ஒருமைப்பாடு அவசியம்.


- **செயல் மனப்பான்மை:** அவர்கள் பேசிப் பின் நிற்கவில்லை; உடனே செயலில் இறங்கினர். நம் வாழ்க்கையிலும், தேவன் நமக்கு கொடுத்த காரியங்களைத் தொடங்கிச் செய்யும் மனப்பான்மை வேண்டும்.

- **ஆதரவு:** "கைகளைத் திடப்படுத்தினார்கள்" என்பதன் பொருள், தைரியத்தையும் உறுதியையும் பெற்றார்கள். நம் கைகளும் பலவீனப்படாமல், தேவனின் வல்லமையால் திடமாக இருக்க வேண்டும்.

இன்றும் தேவன் உங்களுக்குச் சொல்லுகிறார்:

"எழுந்து கட்டுவோம்!" – உங்கள் குடும்பத்தையும், பணியையும், தேவனுடைய சேவையையும் கட்டியெழுப்புங்கள்.


நம்முடைய கைகளை தேவன் திடப்படுத்துவார்.




**இறைப் பணியில்**

MR. SANTHOSH KUMAR

திருச்சபைச் செயலர்



# WHO IS A CHRISTIAN?

This is an important question each one of us must carefully reflect upon. Many of us identify as Christians by birth, by community, by attending church, or even by the certificates we hold. But is this the kind of Christian life Christ expects from us?

**Step 1: Showing Christ's Love at Home**

Christian life begins with love, and the first people to whom we must show Christ's love are those closest to us—our spouse, children, family members and relatives.

Scripture reminds us: "If anyone does not provide for his relatives, and especially for his own household, he has denied the faith and is worse than an unbeliever." (1 Timothy 5:8).

Sadly, many of us fail in this first step. We may appear loving and caring to friends, colleagues, and even strangers, but show irritation, anger, or indifference to our own family.

The first step of Christian living is therefore simple but powerful: love your family members and be kind to them, even when it is difficult.

**Step 2: Loving the Church Family**

Some of us excel in loving our families but struggle to show the same love when it comes to our neighbours or even fellow believers in the church. Sometimes we may avoid those who need care, compassion, and help. Sadly, many of us even carry our grudges, bitterness, and hard feelings into the church. Instead of being a place of healing and love, church sometimes becomes a place where we indirectly express our hatred or avoid certain people we don't want to face.

But what is the church, really? The Bible tells us that the church is not a building, not an organization, but the Body of Christ (1 Corinthians 12:27). Every believer is a part of this body, and together we form a spiritual fellowship. In simple terms, church is the oneness and unity of believers in Christ.

We may be very regular in attending service, reading the Bible daily, worshipping passionately, and spending hours in prayer. But if we cannot love, greet, or even smile at our fellow believers, then we are missing the very heart of Christianity.

The truth is, none of us are perfect. We all have disagreements, anger, and differences of opinion — this is part of human nature. But Christ calls us to overcome these through forgiveness and reconciliation. "Be kind and compassionate to one another, forgiving each

other, just as in Christ God forgave you" (Ephesians 4:32).

Church membership is just a worldly identification. True heavenly identification is the fellowship with our brothers and sisters in Christ — how we love and live-in unity with one another (John 13:35).

### Step 3: Showing Christ to the World

Only after we succeed in steps one and two can we truly move to the third step: showing Christ to the world outside—our neighbours of other faiths, our colleagues, strangers in daily life, and even people we meet briefly in shops, on the road, or during travels

.

Our Christian witness is revealed not only in words but in actions:

On the road: Do we show patience when others make mistakes while driving? Or do we quickly lose our temper, forgetting our own faults?

At work: Do we show integrity, humility, and kindness to colleagues of other religions?

In public life: Do we reflect the love of Christ through gentleness, patience, and compassion, especially to those who may not deserve it?

Remember, Christ loved us when we were undeserving, imperfect, and broken. In the same way, we are called to love others in their weaknesses and failures.

### A Call for Self-Evaluation

Christian life is not about external labels or religious practices alone. It is about reflecting Christ through our love—

First, to our families, Then, to our fellow believers,

And finally, to the wider world.

Let us take time to ask ourselves:

Do I struggle to love my family? Do I avoid or resent fellow believers? Am I failing to show Christ to the people outside the church?

If the answer to any of these is "yes," then it is time to seek reconciliation and realign our lives with the love of Christ.

Article by

MR. MELBIN PAUL

Men's Fellowship





# FAITH OVER FEAR

## TRUSTING GOD IN UNCERTAIN TIMES

Life is full of uncertainties. Illness, financial struggles, job loss, broken relationships, and even global crises like pandemics or war can shake our sense of stability. Fear creeps in quietly, whispering doubts and "what ifs" that cloud our minds and hearts. But as believers, we are called to choose faith over fear, even when life feels out of control.

### GOD'S WORD IS OUR ANCHOR

The Bible is filled with encouragement to face uncertainty with confidence in God. One of the most repeated commands in Scripture is: "Do not fear." Why? Because God knows how easily fear can take root in the human heart. Isaiah 41:10 reminds us:

*"Fear not, for I am with you; be not dismayed, for I am your God. I will strengthen you, I will help you, I will uphold you with my righteous right hand."*

This verse is not just a comforting quote—it's a promise. We are never alone, even in our darkest moments. God is present, and His strength is available to those who trust Him.

### FAITH IS A CHOICE

Faith doesn't mean pretending everything is fine. It means trusting God even when things aren't. It means saying, "Lord, I don't understand what You're doing, but I believe You're in control."

In Matthew 14, when Peter walked on water toward Jesus, he was fine until he looked at the storm around him. The moment he took his eyes off Jesus, he began to sink. The same happens to us. When we focus on our fears instead of our Savior, we become overwhelmed. But when we choose faith—keeping our eyes on Jesus—we find peace even in the storm.

### HOW DO WE STRENGTHEN OUR FAITH?

- **Stay in the Word** – Reading the Bible reminds us of God's character and
- **Pray Honestly** – Bring your fears to God. He listens and comforts.
- **Surround Yourself with Faith** – Fellowship with other believers can

- **Remember Past Victories** – Reflect on times God has already helped you

- **Speak Faith, Not Fear** – Declare God's truth over your life instead of your doubts.

## YOUR FEAR MAY BE SOMEONE ELSE'S FAITH STORY

Sometimes, the very trial we fear can become the testimony that inspires someone else. When people see us trusting God in hard times, they are reminded that He is real, present, and powerful. Your life becomes a living sermon

## CONCLUSION

We may not always know what the future holds, but we know the One who holds the future. Let's not allow fear to rob us of peace, purpose, or faith. Instead, let us echo the words of the psalmist:

> *"When I am afraid, I put my trust in You."*
> *— Psalm 56:3*

In every uncertainty, big or small, choose faith over fear. God is faithful — and He will never fail you

Article by

**MRS. ISWARYA OBED**

Women's Fellowship

## 2 CHRONICLES 25-36
## 2 நாளாகமம் 25-36

1. அமத்சியா கொல்லப்பட்ட இடம் எது?
2. விவசாயத்தில் விருப்பமாயிருந்த ராஜா யார்?
3. யோதாமுக்கு வெள்ளியையும், தானியங்களையும் கொடுத்தவர்கள் யார்?
4. யூதா தேசத்தை சீர்குலையச் செய்தது யார்?
5. தங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொள்ள யார் மன உற்சாகமாயிருந்தார்கள்?
6. எசேக்கியா மன்னிப்பு ஜெபம் யாருக்காக செய்தார்?
7. கோரே என்னும் லேவியனின் பணி என்ன?
8. அணை கட்டப்பட்ட ஆறு எது?
9. அரண்மனையில் கொல்லப்பட்டது யார்?
10. பெண் தீர்க்கதரிசியின் மாமனார் யார்?
11. யோசியாவின் மேல் புலம்பல் பாடின தீர்க்கதரிசி யார்?
12. யூத ஜனங்களை தங்கள் நாட்டிற்கு செல்ல அனுமதித்த ராஜா யார்?

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 15ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

### ஆகஸ்ட்-2025 மாத வினாவிற்கான விடைகள்

| | |
|---|---|
| 1. 2நாளா 13:20 | 7. 2நாளா 19:11 |
| 2. 2நாளா 14:11 | 8. 2நாளா 20:36 |
| 3. 2நாளா 15:16 | 9. 2நாளா 21:12 |
| 4. 2நாளா 16:12,13 | 10. 2நாளா 22:11 |
| 5. 2நாளா 17:16 | 11. 2நாளா 23:11 |
| 6. 2நாளா 18:18 | 12. 2நாளா 24:16 |

### ஆகஸ்ட்-2025 மாத வினாவிற்கான விடைகள் எழுதியவர்கள்

திருமதி. ஜெனிபர் பால்,
திருமதி. ஜெபின் ராஜவேல்,
திருமதி. ஜோனிஸ் ஹெர்சல்,
திருமதி. பிப்லின் நெல்சன்,
செல்வி. அஜின்ஷா,
திருமதி. ஹேமலதா ஸ்டீபன்,
திருமதி. ரேனா ஜோஸ்,
திருமதி. ரோஸ்மேரி,
திருமதி. ராதிகா செல்வக்குமார்.

# மகிமையின் மேல் மகிமை



பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்.

2கொரிந்தியர் 3:18—ஆம் வசனத்தில் உள்ள மகிமையின் மேல் மகிமை அடைந்து மறுரூபப்படுகிறது என்பதை சிந்திப்போம்.

யாத்திராகமம் 40: 33—35 வரையுள்ள வசனங்களில் மோசே ஆசரிப்புக் கூடாரத்தை கட்டி முடித்த போது கர்த்தரின் மகிமை வாசஸ்தலத்தை நிரப்பினது.

2நாளாகமம் 5:14;7:1—3 இப்பகுதிகளில் சாலமோனால் கட்டப்பட்ட ஆலயத்தில் கர்த்தருடைய மகிமை நிரபம்பிற்று. ஆசாரியர்களாலும் ஊழியம் செய்ய நிற்கக் கூடாத அளவிற்கு அம்மகிமை இருந்தது.

நாளாகமத்தின் தொடர்ச்சியாக உள்ள எஸ்றா நூலில் பாரசீக அடிமைத் தனத்திலிருந்து திரும்பின யூதர்கள் எஸ்றா, செருபாபேல் ஆகியோரின் தலைமையின் கீழாக மீண்டும் எருசலேமில் ஆலயத்தை கட்டினார்கள் (எஸ்றா:6:15—22). தொடர்ந்து நெகேமியா தலைமையில் எருசலேமின் அலங்கமும் கட்டி முடிக்கப்பட்டது. (நெகே:6:15,16)

பிரியமானவர்களே, முந்தின ஆலயத்தை காட்டிலும் பிந்தின ஆலயத்தில் என் மகிமை விளங்கும் என்று ஆகாய் தீர்க்கர் வழியாக இறைவாக்கு உரைக்கப்பட்டது (ஆகாய் 2:9).

அந்தப் புதிய ஆலயம் எது? அந்த ஆலயத்தில் ஆண்டவர் இயேசு தூய ஆவியாராய் மகிமையின் மேல் மகிமை அடைகின்றார். அதனை 1 கொரிந்தியர் 3:16, 17 ஆகிய திருவார்த்தைகளில் படிக்கின்றோம்.

இதனையே தூய பவுல் அடிகளார் "மகிமையின் மேல் மகிமை" என்று 2கொரிந்தியர் 3:16—18 இல் குறிப்பிடுகின்றார்.

இயேசு கிறிஸ்து நம்முடன் இருக்கின்றார்,தூய ஆவியானவர் நமக்குள்ளாய் இருக்க இடம் அளிக்கும்போது மகிமையின் மேல் மகிமை அடைவோம் (1கொரிந்தியர் 2:7—10; 1பேதுரு 1:10—12)

நிறைவாக, ஆண்டவர் இயேசு கிறிஸ்து நம் வாழ்வின் வழியாக, மகிமையின் மேல் மகிமை அடைந்திட அவருக்கு இடம் அளிப்போம், அவர் வழி வாழ்வோம். இயேசு கிறிஸ்து நம்மை ஆசீர்வதிப்பார், ஆமென்.




Article by

**MR. ASHOK JAYAKUMAR HANLY PAUL**

Youth Fellowship

# இயேசுவின் சீடன்

# மத்தேயு



**பின்னணி:**

இயேசுவின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவராகிய மத்தேயு, சுங்கச்சாவடியில் வரி வசூலிப்பவராக இருந்தார். இயேசுவின் “என்னைப் பின்பற்றி வா” என்ற அழைப்புக்கு உடனே எல்லாவற்றையும் விட்டு பின்தொடர்ந்தார்.

**மொழி மற்றும் கலாச்சார அறிவு:**

பல்வேறு கலாச்சார மக்களோடு பழகியதால் எபிரேயம், கிரேக்கம், அராமிக் ஆகிய மொழிகளில் புலமை பெற்றார். மொழியறிவு மற்றும் சட்ட அறிவு நற்செய்தி அறிவிப்பில் உதவியது. புதிய ஏற்பாட்டு நூலின் முதல் நூலான “மத்தேயு நற்செய்தி” இவரால் எழுதப்பட்டது.

**பணி ஆரம்பம்:**

முதலில் இயேசு பணியாற்றிய இடங்களிலேயே சேவை செய்தார். பழைய தீர்க்கதரிசனங்களை மேற்கோள் காட்டி இயேசுவின் வரவை போதித்தார். சுமார் 15 ஆண்டுகள் யூதர்களிடையே பணியாற்றினார்.

**வெளிநாட்டு பணி:**

பாரசீகம், எத்தியோப்பியா, எகிப்து ஆகிய இடங்களில் இறைப்பணி செய்தார். எகிப்து தேசத்தில் மன்னனின் மகனை இயேசுவின் பெயரில் உயிர்ப்பித்தார. தொழுநோயால் பாதிக்கப்பட்ட இளவரசி இபிஜெனியாவை குணப்படுத்தினார். இதனால் மக்களின் நம்பிக்கை வளர்ந்து கிறிஸ்தவம் பரவியது. சுமார் 23 ஆண்டுகள் எகிப்து மற்றும் எத்தியோப்பியாவில் சேவை செய்தார்.

**இறப்பு:**

கி.பி. 90—ல் ஆட்சி செய்த தொமீதியன் மன்னன், மத்தேயுவை மரண தண்டனைக்கு உத்தரவிட்டார். ஈட்டியால் குத்தப்பட்டு தியாகமடைந்தார்; இறக்கும் முன் இயேசுவின் பெயரை உச்சரித்தார்.

**இவர் வாழ்கையிலிருந்து நாம் கற்றுகொள்ள வேண்டியது:**

கி.பி. 90—ல் ஆட்சி செய்த தொமீதியன் மன்னன், மத்தேயுவை மரண தண்டனைக்கு உத்தரவிட்டார். ஈட்டியால் குத்தப்பட்டு தியாகமடைந்தார்; இறக்கும் முன் இயேசுவின் பெயரை உச்சரித்தார்.

Article by

**MISS. AJINSHA**

# AUGUST Winners

## Cross Word

- ○ Sherinsha
- ○ Iniyan Immanuel

## Fill in the Blanks

- ○ Sherinsha
- ○ Hazel Hartlyn
- ○ Iniyal Evangelin
- ○ Jesil Bernice
- ○ Jessica
- ○ Johanna

## Kids Colouring

- ○ Hazel Hartlyn
- ○ Iniyal Evangelin
- ○ Jesil Bernice
- ○ Jemimah
- ○ Johanna

## Word Search

- ○ Sherinsha
- ○ Hazel Hartlyn
- ○ Iniyan Immanuel
- ○ Jesil Bernice
- ○ Jessica
- ○ Joshua

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject:** Your name / Quiz, type / Month - Year

**to Church Email:** csitcalain@gmail.com

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

Name:

Date:


Kids Coloring



# Moses

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Q | U | A | I | L | C | R | E | D | S | E | A | Q | U | N | N | N |
| H | F | J | V | Z | Z | Q | N | E | V | I | S | M | N | P | D | E |
| Z | W | S | K | T | I | W | L | F | D | S | I | W | B | R | E | P |
| D | X | P | D | E | Z | R | O | N | B | R | N | D | U | O | S | H |
| X | R | S | F | H | U | N | I | M | S | A | A | H | R | M | E | A |
| I | O | I | H | J | M | Q | O | T | N | E | I | I | N | I | R | R |
| E | W | F | E | O | A | A | R | O | N | L | P | M | I | S | T | A |
| X | D | V | W | H | C | M | A | R | T | I | E | I | N | E | O | O |
| O | P | C | A | N | A | A | N | U | B | T | N | R | G | D | G | H |
| D | W | L | Q | R | M | A | N | N | A | E | I | A | B | L | W | R |
| U | G | X | L | G | O | D | V | V | V | S | N | C | U | A | H | V |
| S | R | L | J | P | S | B | E | S | V | V | S | L | S | N | O | W |
| E | G | Y | P | T | E | A | E | M | D | T | U | E | H | D | W | K |
| R | N | B | R | E | S | C | P | M | C | W | L | S | V | Z | U | J |
| X | Y | F | O | O | D | A | C | Q | H | B | A | E | S | M | L | D |
| X | V | U | X | O | U | L | G | O | I | Q | S | X | N | O | O | M |
| P | M | R | N | U | Q | U | F | D | W | L | D | O | W | Y | E | Q |

sinai peninsula
promised land
burning bush
israelites
miracles
red sea
Pharaoh
exodus
desert
canaan
egypt
quail
manna
Aaron
Moses




Name :

WORD SEARCH

Name : ..........................................................


Exodus 3: 1–2

# Help Moses Find the Burning Bush



# CROSS WORD

**Name :** ..............................................................................



**ACROSS**

3 Destination of Israelites (2 words)
4 Rules that God gave to Moses (2 words)
6 Wife of Moses
9 Death of all Egyptian ___ (final plague)
11 Jewish holiday with origin in Exodus
12 Egyptian ruler
15 Waters parted by God (2 words)
16 Second plague
17 God called Moses from a burning ___

**DOWN**

1 Pillar of ___ (nighttime guide)
2 Food supplied by God
4 Number of plagues on Egypt
5 Ninth plague
7 Sister of Moses
8 A land flowing with milk and ___
10 Eighth plague
13 Brother of Moses
14 ___ of the Covenant

# SEPTEMBER - 2025

| | |
|---|---|
| 01-SEPTEMBER | Master. Allen Riyo |
| 02-SEPTEMBER | Mrs. Shafeena |
| 03-SEPTEMBER | Mr. David Thomas Packiraj |
| 04-SEPTEMBER | Mr. Celin Jose |
| 04-SEPTEMBER | Mrs. Jamuna Rani |
| 05-SEPTEMBER | Mrs. J.N. Basil Shallu |
| 05-SEPTEMBER | Mrs. K.V. Ashmitha Lifin Raj |
| 08-SEPTEMBER | Dr. Divya Dharshini |
| 09-SEPTEMBER | Mr. J. Vinith Samuel |
| 09-SEPTEMBER | Baby. J.B. Ferrozlin Jesi |
| 09-SEPTEMBER | Miss. Pauline |
| 10-SEPTEMBER | Mrs. R. Muneeswari |
| 10-SEPTEMBER | Mrs. Shiby Angel |
| 10-SEPTEMBER | Mr. M. Asphin Raj |
| 10-SEPTEMBER | Rev. S. Baktha Thiyagarajan |
| 11-SEPTEMBER | Miss. Jemima Ashni |
| 11-SEPTEMBER | Mstr. Samuel Hebron Stephen |
| 12-SEPTEMBER | Mrs. J.P. Pamela Jennifer |
| 13-SEPTEMBER | Mr. I. Berlin Jose |
| 13-SEPTEMBER | Mr.. Joel Singh Edison |

"For I know the plans I have for you," declares the Lord, "plans to prosper you and not to harm you, plans to give you hope and a future."

| | |
|---|---|
| 17-SEPTEMBER | Mr. Nelson Sopitha Raj |
| 18-SEPTEMBER | Mrs. P. Hemalatha |
| 19-SEPTEMBER | Mr. K.S. Suji kumar |
| 19-SEPTEMBER | Ms. Leni |
| 21-SEPTEMBER | Mr. S. Jesvin Bose |
| 21-SEPTEMBER | Mrs. Segena Livingston |
| 22-SEPTEMBER | Miss. Janet Thirza |
| 23-SEPTEMBER | Mr. Sharon S. Rao |
| 23-SEPTEMBER | Ms. Shivi Mol Shalinal |
| 24-SEPTEMBER | Mr. Danesh Yogendra Rao |
| 26-SEPTEMBER | Miss. J. Jofina |
| 27-SEPTEMBER | Ms. Pragathi |
| 28-SEPTEMBER | Mrs. S. Divya Sherrin |
| 28-SEPTEMBER | Mrs. Annie Pamila |
| 29-SEPTEMBER | Mrs. Sugitha Isravel |
| 30-SEPTEMBER | Master. Immanual |

"For through wisdom your days will be many, and years will be added to your life." -proverbs 9:11

"The Lord bless you and keep you; the Lord make his face shine on you and be gracious to you; the Lord turn his face toward you and give you peace."

# SEPTEMBER *Wedding* ANNIVERSARY

**02-SEP** Mr. D. Jeyakumar & Mrs. J. Vivilin Juni

**03-SEP** Mr. P. Chandrasekar & Mrs. Harika Chandrasekar

**05-SEP** Mr. Praveen Paul & Mrs. Sugitha Isravel

**07-SEP** Mr. Suresh Rajan & Mrs. Anitha Rajan

**09-SEP** Mr. Danesh Yogendra Rao & Mrs. Annie Selvi Dan

**11-SEP** Mr. J. Vinith Samuel & Mrs. M. Aishwariya

**12-SEP** Mr. David Thomas Packiraj & Mrs. Marylene Hana

**15-SEP** Mr. Prince Emmanuvel & Mrs. Josephine Nimshi

**16-SEP** Mr. D. Rajavel & Mrs. Jein Arputhakani Rajavel

**16-SEP** Rev. S. Baktha Thiyagarajan & Mrs. Velanganni

**16-SEP** Mr. A. Stalin Jose & Mrs. J. Babi Kutti

"And over all these virtues put on love, which binds them all together in perfect unity." -Colossians 3:14

**DEDICATION DATE**

**28.09.25**
**SUNDAY**

**C.S.I.PUNEPALLI CHURCH, CHITTOOR**















# OUTREACH MINISTRY

Our Outreach Ministry is dedicated to reaching communities with the love and truth of Jesus Christ. Through house visits, prayer gatherings, Bible study, and personal care, we bring the Gospel to those who may never step into a church building.

We walk alongside people in their struggles, offering encouragement, hope, and the message of salvation. Whether under a palm tree or in a labor camp room, our mission remains the same: to see lives transformed by the power of God's Word and the presence of the Holy Spirit.

"Celebrate the Festival of Harvest with the firstfruits of the crops you sow in your field. "Celebrate the Festival of Ingathering at the end of the year, when you gather in your crops from the field.
-Exodus 23:16

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்

# HARVEST FESTIVAL

## 08 NOVEMBER 2025

6 pm Onwards
Grand Stand Stadium Auditorium

## HIGHLIGHTS

Thanks Giving
Delicious Food Stalls
and more


Contact:
+971 56 489 3587
Stanley (HF Convenor)
+971 56 766 8348
Rev. Baktha Thiyagarajan




**EDITOR**
**THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE**
**TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348**
**Email: csitcalain@gmail.com**
**Web: csitamilparishalain.org**

**STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY**